Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C. NO.13/2020
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.8, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முரளி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | திருஞானம் | தொழில் | அலுவலக உதவியாளர், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1, வேலூர் |
| கிராமம் | குடியாத்தம் | மதம் | |
| மாவட்டம் | வேலூர் | வயது | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 20th day of August 2024

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>.- (எதிரி ஆஜரில் உள்ளார்)**

நான் மேற்படி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் அலுவலக உதவியாளராக நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1, வேலூரில் வேலை செய்கிறேன். திருப்பத்துர் சார்பு நீதிமன்றத்தில் கடந்த 2017 ம் வருடத்திலிருந்து இரவு காவலராக பணியிலிருந்தபோது 14.09.2019 அன்று திருப்பத்துர் சார்பு நீதிமன்றத்தில் மெகா லோக் அதலாத் நடந்த சமயம் நான் பணியிருந்தேன். திருப்பத்துர் சட்ட பணிகள் ஆணை குழுவில் நிர்வாக உதவியாளராக பணி செய்த அ.சா.1 தினகரன் என்பவரின் கையொப்பம் குரிசிலாப்பட்டு பாரத ஸ்டேட் வங்கியின் மேலாளர் போர்ஜெரியாக போட்டுவிட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

1. சம்பவத்தின்போது நான் இரவு பணியாளராக பணிபுரிந்தேன் என்றால் சரிதான். 13.09.2019 அன்று இரவு காவலர் பணி பார்த்தேன் என்றால் சரிதான். 13.09.2019 அன்று இரவு காவலர் பணி பார்த்துவிட்டு 14.09.2019 பகல் நேர பணியும் பார்த்தேன். சட்ட பணி உதவியாளர் தினகரன் என்னிடம் வந்து SBI மேலாளர் அவருடைய கையொப்பத்தை போர்ஜெரியாக போட்டுவிட்டதாக சொன்னரா என்றால் பிரச்சனை முடிந்தபிறகு அவர் என்னிடம் சொன்னார். SBI வங்கியின் அப்போதிய மேலாளர் யார் என்று

எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலிசார் விசாரிக்கும்போது ஆஜர் எதிரி தான் அப்போது SBI வங்கியின் மேலாளர் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மெகா லோக் அதலாத்தில் என்ன நடந்தது என்று தெரியுமா என்றால் அப்பொழுது தெரியவில்லை, பிரச்சனை முடிந்து தான் தெரியவந்தது.

2. என்ன பிரச்சனை என்றால் தினகரன் கையொப்பத்தை SBI மேலாளர் போட்டுவிட்டார். போலிசார் விசாரணையில் நான் சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் சம்பவம் நடக்கும்போது எனக்கு தெரியாது. வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்றாலும், தினகரன் கேட்டுக்கொண்டதால் நான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

Signature of Witness